OFFICE OF **FAIR TRADING**
*NSW Consumer Protection Agency*
**Department of Commerce**

# நாங்கள் உங்களுக்கு உதவ முடியும்

Fact Sheet | FTD01TM | Tamil | July 2004

**i** பொது விசாரணைகள்
✆ **13 32 20**
வர்த்தக நேரம்

**i** மொழி உதவி
✆ **13 14 50**
வர்த்தக நேரம்

**உங்களுக்கு தெரியுமா, நம்மில் பெரும்பாலோனோர் நியாய வர்த்தக சட்டங்களால் ஒவ்வொரு நாளும் பாதிக்கப்படுகிறோம் என்று, நீங்கள் கடையில் பொருட்கள் வாங்குவதாக இருந்தாலும், வீட்டை வாடகைக்கு விடுவதாயிருந்தாலும், மோட்டார் வாகனம் வண்டி வாங்குவதாயிருந்தாலும், உங்கள் வீட்டைக் கட்டவோ அல்லது புதுப்பித்தாலோ அல்லது ஓய்வுகால கிராமம் ஒன்றிற்கு செல்வதாயிருந்தாலும் கூட, இப்பாதிப்பு உண்டாகிறது.**

நியாய வர்த்தக அலுவலகம் New South Wales-ிலுள்ள நுகர்வோர்கள் மற்றும் வியாபாரிகளுக்கு இலவச உதவி மற்றும் தகவல்களை வழங்குகிறது. ஒரு நுகர்வோராகவோ அல்லது வியாபாரியாகவோ உங்கள் உரிமைகள் மற்றும் கடமைகள் பற்றி அறிந்து கொள்வது, அங்காடி இடத்தில் நியாயம் கிடைப்பதை உங்களுக்கு உறுதியளிக்கிறது.

## நுகர்வோர்களுக்கு உதவுதல்

### *சரக்குகள் மற்றும் சேவைகளை வாங்கல்*

பொருட்கள் வாங்குவது செய்வது ஒரு வேடிக்கையான அனுபவமாக இருக்கலாம். ஆனால் ஏதாவது தவறு ஏற்பட்டால், அந்த அனுபவமே ஒரு குழப்பமான மற்றும் ஆர்வக்குலைவை உண்டாக்கும் ஒரு அனுபவமாக மாறக்கூடும். பணத்தை திருப்பியளித்தல், சேமிப்புக்கள், கால அளவு அட்டவணைகள் மற்றும் பாதுகாப்பில்லாத அல்லது குறைபாடுள்ள தயாரிப்புக்கள் போன்ற எல்லா வகையான வாங்கும் நிலைமைகளிலும் நியாய வர்த்தக சட்டங்கள் உங்கள் உரிமைகளையும், பொறுப்புக்களையும் தெளிவாக்குகின்றன. உங்களுக்கு தொல்லை ஏதேனும் ஏற்பட்டால், உங்களுக்கு உதவக்கூடிய தகவல்களை நாங்கள் வழங்க முடியும். ஆனால் எச்சரிக்கையாய் இருங்கள். வியாபாரிகள் மற்றும் சில்லறை வியாபாரிகளுக்கும்கூட உரிமைகள் உள்ளன. நீங்கள் அவர்களுக்கு தவறாக தகவல் தெரிவித்து இருக்கலாம் அல்லது தவறான தேர்வை செய்திருக்கலாம்.

### *கடன் தொல்லைகள்*

பணக் கஷ்டத்தில் இருப்பவர்களுக்கு, கடன் விவரம் தொடர்பாக, ஃபேர் டிரேடிங் தகவல்களை அளிக்கிறது. ஆனால் இத்தொல்லை துவங்கியதுமே எங்களைத் தொடர்பு கொள்ள வேண்டியது மிகவும் முக்கியமாகும் இல்லையென்றால் நாங்கள் உதவ முடியாமல் போகலாம். மேலும் பணக் கஷ்டத்தில இருப்போர்களுக்கு நாங்கள் சமுதாய அடிப்படையிலான கலந்தாலோசனை சேவைகளையும் வழங்குகிறோம்.

think smart
on consumer rights
A NSW Office of Fair Trading initiative for Ethnic Communities

*புகார் நீக்கல்*

உங்களிடம் சட்டரீதியான புகார் ஒன்று இருப்பதாக நீங்கள் நம்பினால், முதல் கட்ட நடவடிக்கையாக, வியாபாரி அல்லது சேவை வழங்குவோருடன் நேரிடையாய் தொடர்பு கொண்டு தொல்லையை களைய, அனைத்து முயற்சிகளையும் செய்ய வேண்டும்.

- தொல்லை என்னவென்றும், அதை எப்படி தீர்த்து வைக்க நீங்கள் விரும்புகிறீர்கள் என்றும் தெளிவாய், உறுதியாய் மற்றும் பணிவாய் தெரிவிக்கவும்.
- அனைத்து ரசீதுகள், கால அளவு அட்டவணைகள் மற்றும் விலைக் குறிப்பீடுகளையும் உங்களுடன் வைத்திருக்கவும்.

ஒரு திருப்திகரமான முடிவை நீங்கள் எட்டாவிட்டால், நீங்கள் எங்களைத் தொடர்பு கொள்ள வேண்டிய நேரம் வந்து விட்டது எனலாம். நாங்கள் உங்கள் உரிமைகள் குறித்த இலவச தகவல்களைத் தருவதுடன், நுகர்வோர் அல்லது வாடகையாளர் சச்சரவுகள் போன்றவற்றில் சுதந்திரமான, மிகக்குறைந்த செலவிலான மற்றும் அணுகுவதற்கு எளிதான சச்சரவுத் தீர்வுகளை வழங்கும் கன்ஸூமர், நுகர்வோர் நீதி வழக்கு மன்றத்திற்கு சிபாரிசு செய்தல் உள்ளிட்ட, சச்சரவுகளைத் தீர்க்கும் அனைத்து வழிகளையும் தெரிவிக்கிறோம்.

*மோட்டார் வண்டிகள், கார்கள், பைக்குகள் மற்றும் படகுகள் (REVS)*

தனிப்பட்ட முறையில் பழைய கார், பைக் அல்லது படகுகளை வாங்கும்முன், REVS (வில்லங்கமான வாகனங்களை பதிவு செய்தல்)-தொடர்பு கொண்டு, அவ்வாகனம் தொடர்பான பணபாக்கி ஏதேனும் உள்ளதா, அவ்வாகனம் திருடப்பட்டதாக போலீசாரிடம் புகார் செய்யப்பட்டுள்ளதா, பதிவு செய்யப்பட்டதிலிருந்து அகற்றப்பட்டதா அல்லது தள்ளுபடி செய்யப்பட்டதாக RTA-வால் தெரிவிக்கப்பட்டதா என்று தெரிந்து கொள்ளுங்கள். சோதிக்காமல் நீங்கள் வாங்கினால், உங்கள் உடைமையை இழக்கும் ஆபத்தை நீங்கள் சந்திக்க வேண்டியிருக்கும். வியாபார நேரத்தில், வாரத்தின் ஏழு நாட்களும் நீங்கள் REVS -த் தொடர்பு கொள்ளலாம். www.revs.nsw.gov.au என்ற இணைய தளத்தில் உங்கள் சொந்த REVS சோதனையை செய்யலாம்.

மோட்டார் வாகன கால அட்டவணை தொல்லைகள் உங்களுக்கு இருந்தால், ஃபேர் டிரேடிங்கையும் நீங்கள் தொடர்பு கொள்ளலாம்.

*வீடு கட்டுதல் மற்றும் புதுப்பித்தல்*

புதிய வீடு ஒன்றை வாங்கவோ அல்லது வீட்டை புதுப்பிக்கவோ நினைக்கிறீர்களா? ஃபேர் டிரேடிங் அலுவலகத்தில் தற்சமயம் உரிமம் பெற்றுள்ள கட்டிடம் கட்டுபவர் அல்லது விற்பனையாளரை மட்டுமே உபயோகிக்கவும் - உங்களுக்கென, நாங்கள் இதை சரிபார்க்க இயலும். எழுதப்பட்ட ஒப்பந்தங்களின் முக்கியத்துவம், வீட்டு கால கெடு காப்பீடு மற்றும் கட்டிட சச்சரவுகளை தீர்த்து வைத்தல் போன்ற பல்வேறு நிதர்சன தகவல்களை, எங்களது இணையதளம் மற்றும் கட்டிட பிரசுரங்கள் கொண்டுள்ளன.

*பணி ஓய்வுகால கிராமங்கள்*

பணி ஓய்வுகால கிராமங்களுக்கு செல்ல நினைப்பவர்களுக்கோ அல்லது அதுபோன்ற ஒன்றிற்கு செல்ல ஏற்கனவே நினைத்து வருபவர்களுக்கோ உதவும் பொருட்டு, எங்களிடம் எண்ணற்ற இலவச பிரசுரங்கள் உள்ளன. வருங்கால வாடகை குடியிருப்பாளர்கள், குடியிருப்பாளர்கள் அல்லது இயக்குநர்கள் உரிமைகள் தொடர்பான கேள்விகளுக்கு

எங்கள் சிறப்பு சேவை நிறுவனங்கள் பதிலளிக்கும்.

*வாடகைக்கு விடுவது*

வாடகைக்கு குடியிருப்பவர்கள், வீட்டுச் சொந்தக்காரர்கள் மற்றும் ரியல் எஸ்டேட் ஏஜெண்டுகளுக்கு, அவர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் குறித்து, இலவச வியாபாரத் தகவல்களை அளிக்கிறது. குடியிருப்பு பூங்காக்கள் உள்ளிட்ட அனைத்து குடியிருப்பு பூங்காக்கள் உள்ளிட்ட அனைத்து குடியிருப்பு சுற்றுப்புறங்கள் குறித்த தகவல்களையும் இச்சேவை வழங்குகிறது. வாடகைக்கு குடியிருப்பவர்களுடன் குறிப்பாக தொடர்பு கொண்டு பணிபுரியும் NSW-ல் உள்ள பல்வேறு சமுதாய அடிப்படையிலான பரிந்துரைப்பு மற்றும் ஆலோசனை சேவைகளுக்கு நாங்கள் நிதி உதவி அளிக்கிறோம்.

எந்த ஒரு வீட்டுச் சொந்தக்காரருக்கோ அல்லது அவரது ஏஜெண்டுக்கோ, பத்திரத் தொகையாக வழங்கப்பட்ட பணம், குடியிருப்பு காலம் முடியும் வரை, ரென்ட்டல் பாண்ட் போர்டுடில் பாதுகாப்பாய் தாக்கல் செய்யப்பட வேண்டும். உங்கள் பத்திரம் குறித்த விசாரணைகளுக்கு எங்களைத் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளுங்கள்.

*உங்கள் வீட்டை வாங்கவோ அல்லது விற்கவோ வேண்டுமா?*

ஒரு வீட்டை வாங்குவதுதான், நீங்கள் வாழ்நாளில் செய்யும் மிகப்பெரும் விலையுயர்ந்த செயலாக இருக்கும். ஏலத்திலோ, அல்லது ஒரு ரியல் எஸ்டேட் ஏஜெண்ட் மூலமாகவோ அல்லது ஒரு மேம்படுத்துபவர் மூலமாகவோ, வீட்டை வாங்கும்போதோ அல்லது விற்கும்போதோ தொல்லைகளை சந்திப்போருக்கு, ஃபேர் டிரேடிங் தகவல்களை வழங்குகிறது.

*ஸ்ட்ராட்டா வாழ்வு*

ஸ்ட்ராட்டா பிரிவு ஒன்றில் வாழ்ந்து வரும், வேலை செய்யும் அல்லது சொந்தமாகக் கொண்டுள்ள இலட்சக்கணக்கான மக்களில் நீங்களும் ஒருவரா அல்லது, ஸ்ட்ராட்டா வாழ்க்கைப் பணியில் வீட்டை வாங்க விரும்புகிறீர்களா? அப்படியானால், சச்சரவுகளை தீர்ப்பது உள்ளிட்ட ஸ்ட்ராட்டா நிர்வாகம் மற்றும் ஆட்சி முறையின் அனைத்து அம்சங்கள் பற்றிய தகவல்களையும் ஃபேர் டிரேடிங் வழங்குகிறது.

## வியாபாரத்தில் உதவி செய்தல்

*இப்பொழுதுதான் துவங்குகிறீர்கள்?*

துவங்கப்படுமுன் உங்கள் வியாபாரத்திற்கு அரசு உரிமங்களும், அனுமதி சீட்டும் தேவைப்படலாம். எமது பிஸினஸ் லைசென்ஸ் இன்ஃபர்மேஷன் சர்வீஸ்(BLIS) ஒரு இலவச சேவையாகும். தொலைபேசி மூலம் ஒரு முறை தொடர்பு கொண்டோ அல்லது எங்கள் இணைய தளத்தின் வழியாகவோ, என்னென்ன உரிமங்கள் உங்களுக்குத் தேவை மற்றும் எந்தெந்த படிவங்களை பூர்த்தி செய்வது போன்ற விவரங்களை நீங்கள் தெரிந்து கொள்ளலாம். அவ்வளவு எளிமையானது இது.

*உங்கள் வியாபாரப் பெயரை பதிவு செய்தல்*

வியாபார உரிமையாளர் பெயரைக் கொண்டில்லாத ஒரு வியாபாரப் பெயர், ஃபேர் டிரேடிங்குடன் பதிவு செய்யப்பட வேண்டும். ஃபேர் டிரேடிங் சென்டரின் எந்தவொரு பிரிவிலும், உங்கள் வியாபாரப் பெயர்களை உடனடியாக நீங்கள் பதிவு செய்யவும், புதுப்பிக்கவும் இயலும். ஒரு வியாபாரப் பெயர் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டு விட்டதா இல்லையா என்று எங்கள் இணைய தளத்தின் மூலமும் நீங்கள் சோதிக்கலாம்.

## நிபுணர்கள் தொடர்புகள்

**REVS**
*9633 6333 அல்லது*
*1800 424 988**
*www.revs.nsw.gov.au*

*குடியிருப்பு*
*9377 9100 அல்லது*
*1800 451 301**

*வாடகை ஒப்பந்தங்கள்*
*9377 9000 அல்லது*
*1800 422 021**

*பணி ஓய்வு கிராமங்கள்*
*9895 0297*

*ரியல் எஸ்டேட் சேவைகள்*
*9895 0297*
*1800 625 963**

*வகுப்பு வாழ்க்கை*
*9338 7900அல்லது*
*1800 451 431**

*கடன்*
*9895 0297*

*நுகர்வோர் வணிகர் மற்றும் வாடகை குடியிருப்புத் தொடர்பான நடுவர் மன்றம்*
*1300 135 399*

**BLIS**
*9619 8722 அல்லது*
*1800 463 976**

*வர்த்தகப் பெயர்கள்*
*13 32 20*

*கூட்டுறவு சங்கங்கள் மற்றும் சங்கங்கள்*
*6333 1400*
*1800 502 042*

*பொருள் பாதுகாப்பு*
*9895 0254*

*வர்த்தக அளவீடு*
*8467 4400*

*இல்லம், கட்டிட சேவை*
*1300 554 668*

***Sydney-க்கு வெளியே**

### *இலாபம்-ஈட்டா நிறுவனங்கள் அல்லது கூட்டுறவு நிறுவனங்களை அமைத்தல்*

உங்கள் இலாபம்-ஈட்டா நிறுவனத்திற்கு, சங்கமாக அதை இணைப்பது மூலம் ஒரு சட்ட அங்கீகாரத்தை வழங்கல். நிறுவன உறுப்பினர்களுக்கு, ஒரு முக்கிய சட்டப் பாதுகாப்பை இது வழங்குகிறது. எந்தவொரு ஃபேர் டிரேடிங் சென்டரிடமிருந்தோ அல்லது தி ரெஜிஸ்ட்ரி ஆஃப் கோ-ஆப்ரேட்டிவ்ஸ் அண்டு அஸோஸியேஷன்ஸிடமிருந்தோ ஒரு சங்கம் அமைப்பதற்குத் தேவையான அனைத்து காகித ஆவணங்களையும் நீங்கள் பெறலாம்.

ஒரு கூட்டுறவு நிறுவனம் என்பது தங்கள் பரஸ்பர ஆதாயத்திற்கென அதன் உறுப்பினர்களால் உரிமை கொண்டாடப்பட்டு, கட்டுப்படுத்தப்படும் ஒரு வியாபார நிறுவனமாகும். எங்கள் ரெஜிஸ்ட்ரி ஆஃப் கோ-ஆப்பரேட்டிவ்ஸ் அண்டு அஸோஸியேஷன்ஸ் இலவச தகவல்கள் மற்றும் ஆலோசனைகள் மற்றும் ஒரு இலவச தகவல் தொகுப்பு போன்றவற்றை உங்களுக்கு வழங்கும்.

### *கட்டுபவர்கள் மற்றும் வியாபாரிகள்*

உங்கள் தொழிற்துறையை பாதிக்கும் சீர்த்திருத்தங்கள் குறித்து உடனடியாய் தெரிந்து கொள்வது மிகவும் முக்கியமாகும். ஒப்பந்தக்காரர் உரிமம் பெறுதல், வீட்டு உத்திரவாத காப்பீடு திட்டம் மற்றும் சிறப்பான ஒப்பந்தங்களை தயாரித்தல் உள்ளிட்ட பல்வேறு வகையான தகவல்களை எங்கள் இணைய தளம் வழங்குகிறது. உங்கள் உரிமத்தின் நடப்பு தகுதிநிலை குறித்து, ஆன்-லைன் கட்டிட உரிம சோதனை அமைப்பின் மூலம் நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

### *பாதுகாப்பான தயாரிப்புக்கள்*

நீங்கள் ஒரு சில்லறை வியாபாரியோ, மொத்த விற்பனையாளரோ, உற்பத்தியாளரோ அல்லது இறக்குமதியாளரோ, யாராயிருந்தாலும் நீங்கள் விற்பனை செய்யும் பொம்மைகள் மற்றும் மின்சார பொருட்கள் மற்றும் சாதனங்கள் உள்ளிட்ட, அனைத்துப் பொருட்களும் தயாரீபபு பாதுகாப்பு தரங்களை ஒத்துப் போவதை உறுதிப்படுத்த வேண்டும். தாங்கள் வாங்கும் பொருட்கள் குறித்த அனைத்து விவரங்களையும் நுகர்வோர் அறியும்பொருட்டு, தேவையான தகவல்களை தயாரிப்பு பொருட்கள் வழங்க வேண்டும். இந்த சட்டங்கள் குறித்த அனைத்து தகவல்களையும் ஃபேர் டிரேடிங் வழங்கும்.

### *வியாபார அளவுகள்*

உங்கள் வியாபாரத்தில் தராசுகள், அலகுகள் அல்லது பிற அளவு பார்க்கும் கருவிகளை நீங்கள் உபயோகிப்பவராக இருந்தால், அக்கருவிகள் மிகத் துல்லியமான அளவைக் காட்டுவதாக இருப்பதையும், அனைத்து பேக்கேஜ் செய்யப்பட்ட பொருட்களின் எடை உள்ளிட்ட விவரங்கள் அடங்கிய விவரச் சீட்டு ஒட்டப்பட்டு இருப்பதையும் நீங்கள் உறுதிபடுத்த வேண்டும். கூடுதல் விவரங்களுக்கு, ஃபேர் டிரேடிங்கை தொடர்பு கொள்ளவும்.

**எங்கிருந்து கூடுதல் தகவல்களைப் பெறுவது**
**Fair Trading Centres**
தொலைபேசி : 13 32 20

**TTY** தொலைபேசி : 9338 4943
*காது கேளாதோருக்கான தொலைபேசி சேவை.*

**மொழி உதவி** தொலைபேசி சேவை 13 14 *50 உங்கள் மொழியில் மொழிபெயர்ப்பாளர் தேவைப்பட்டால் விசாரிக்கவும்.*

**www.fairtrading.nsw.gov.au**

இந்த தகவல் விவரத்தாளை, ஒரு சட்ட ஆலோசனையாக நீங்கள் கருதக் கூடாது. இத்தலைப்பிலான கூடுதல் தகவல்களுக்கு, தயவுசெய்து பொருத்தான சட்டத்தை கலந்தாய்வு செய்யுங்கள்.